**ஒதுக்கீட்டுத் தலைப்பு – 272 – மாவட்டச் செயலகம் குருநாகலை**

## குருநாகலை மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்களின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

### 1. மாவட்டச் செயலகத்தின் பிரதான பணிகள்

(i) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்கள் மற்றும் நியதிச்சட்டக் கட்டளைச் சட்டங்களினால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள், பிரதேச செயலகங்களின் நடவடிக்கைகள் என்பன அரசாங்க விதிகளுக்கமைய அமுல்படுத்தப்படுவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பும் வழிகாட்டலும்.

(ii) மாவட்டத்தில் சட்டம், ஒழுங்கு பேணப்படுவதற்கும் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்துவதற்கும் பாதுகாப்புப் பிரிவினருடன் சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளல்.

(iii) பிற அரச நிறுவகங்களது பிரதிநிதியாகச் செயல்படுவது மற்றும் அரச வருவாயைக் சேகரித்தல் மற்றும் கணக்கிலிடுவதற்கான நிலையமாகச் செயற்படுதல்.

### 2. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

| | |
|---|---|
| குருநாகலை | ரிதீகம |
| பன்னல | மல்லவபிட்டிய |
| வாரியபொல | மாஸ்பொத்த |
| இப்பாகமுவ | பிங்கிரிய |
| கனேவத்த | நாரம்மலை |
| மஹோ | பொல்பித்திகம |
| கிறிபாவ | கல்கமுவை |
| அம்பன்பொல | எஹெடுவெவ |
| பண்டுவஸ்நுவர (மேற்கு) | நிக்கவரட்டிய |
| பண்டுவஸ்நுவர (கிழக்கு) | கொபெய்கனே |
| குளியாப்பிட்டிய (மேற்கு) | ரஸ்நாயகபுர |

| | |
|---|---|
| குளியாப்பிட்டிய (கிழக்கு) | கொட்டவெஹெர |
| அளவ்வ | வீரம்புகெதர |
| மாவத்தகமை | பமுனாகொடுவ |
| பொல்கஹவல | உடுபத்தாவ |

## 3. வருடாந்த செயல்திட்டம்

மாவட்டச் செயலகம் நிதியாண்டின் ஆரம்பத்தில் வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை.

## 4. கணக்குகள்

### 4.1 மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

குருநாகலை மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழுள்ள 30 பிரதேச செயலகங்களுக்கான நிதியேற்பாடு ரூபா 892,850,000 ஆகும். மீளாய்வாண்டு முடிவில் அதில் ரூபா 852,427,429 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, சேமிப்பு ரூபா 40,422,571 ஆகும். அது மொத்த நிகர நிதியேற்பாட்டில் 4.52% ஆகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினத்தின் தன்மை | மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு | நிகர நிதியேற்பாடு | செலவினம் | சேமிப்பு | சேமிப்பு நிகர நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருவன | 839,450,000 | 839,450,000 | 801,862,689 | 37,587,311 | 4.47 |
| மூலதனம் | 53,400,000 | 53,400,000 | 50,564,740 | 2,835,260 | 5.3 |
| மொத்தம் | 892,850,000 | 892,850,000 | 852,427,429 | 40,422,571 | 4.52 |

## 4.2 பிற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெறப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்ட விதம்

பல்வேறு நடவடிக்கைகளுக்குமெனப் பிற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து ரூபா 4,613,190,179 நிதியேற்பாடு பின்வருமாறு பெறப்பட்டிருந்தது. அவை பயன்படுத்தப்பட்ட விபரம் கீழே காணப்படுகின்றது.

| தலைப்பு இலக்கம் | அமைச்சு/திணைக்களம் | நிதியேற்பாடு | உள்ளபடியான செலவு | சேமிப்பு/மிகை (2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு) |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 101 | புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சு | 600,000 | 598,720 | 1,280 |
| 103 | பாதுகாப்பு அமைச்சு | 217,820 | 202,017 | 15,803 |
| 105 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 1,610,182,723 | 1,207,655,255 | 402,527,468 |
| 106 | இடர் முகாமைத்துவ அமைச்சு | 6,911,313 | 6,290,000 | 621,313 |
| 110 | நீதி அமைச்சு | 4,556,436 | 3,437,263 | 1,19,173 |
| 116 | கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு | 75,000 | 75,000 | 0 |
| 118 | கமத்தொழில் அமைச்சு | 266,729 | 124,676 | 142,053 |
| 120 | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு | 18,100,143 | 18,100,143 | 0 |
| 121 | பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 2,545,514 | 2,497,863 | 47,651 |
| 124 | சமூக சேவைகள் அமைச்சு | 10,327,355 | 10,019,292 | 308,063 |

| | | | | |
|---|---|---|---|---|
| 127 | தொழில் உறவுகள் மற்றும் உற்பத்தி விளைதிறன் மேம்பாட்டு அமைச்சு | 911,392 | 871,156 | 40,236 |
| 133 | தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 14,926,023 | 12,265,275 | 2,660,748 |
| 134 | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு | 211,505 | 208,697 | 2,808 |
| 139 | கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு | 2,254,614 | 493,329 | 1,761,285 |
| 142 | தேசிய மரபுகள் மற்றும் கலாசார விவகார அமைச்சு | 7,803,539 | 4,631,389 | 3,172,150 |
| 145 | மீள்குடியேற்ற அமைச்சு | 2,356,292 | 2,091,823 | 264,469 |
| 152 | நீர்பாசன மற்றும் நீரியல்வள முகாமைத்துவ அமைச்சு | 1,056,101 | 958,521 | 97,580 |
| 153 | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 52,507,305 | 51,982,180 | 525,125 |
| 156 | இளைஞர் விவகார அமைச்சு | 696,270 | 558,088 | 138,182 |
| 160 | சுற்றாடல் அமைச்சு | 10,343,000 | 1,760,595 | 8,582,405 |
| 201 | பௌத்த விவகாரத் திணைக்களம் | 34,813,623 | 31,999,644 | 2,813,979 |
| 203 | கத்தோலிக்க அலுவல்கள் திணைக்களம் | 65,000 | 65,000 | 0 |
| 206 | காலாச்சார விவகார திணைக்களம் | 9,500 | 9,500 | 0 |
| 210 | தகவல்கள் திணைக்களம் | 8,000 | 7,999 | 1 |
| 216 | சமூக சேவைகள் திணைக்களம் | 10,187,790 | 9,790,549 | 397,241 |

| | | | | |
|---|---|---|---|---|
| 217 | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் | 10,282,080 | 10,095,658 | 186,422 |
| 218 | சமூர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 1,011,979,273 | 996,974,470 | 15,004,803 |
| 219 | விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம் | 2,770,588 | 121,500 | 2,649,088 |
| 226 | குடிவரவு, குடியகல்வு திணைக்களம் | 19,995 | 17,115 | 2,880 |
| 227 | ஆட் பதிவுத் திணைக்களம் | 28,518 | 27,056 | 1,462 |
| 252 | குடிசன மதிப்பு, புள்ளி விபரத் திணைக்களம் | 4,622,298 | 3,582,944 | 1,039,354 |
| 253 | ஓய்வூதியத் திணைக்களம் | 1,357,912,365 | 1,274,539,349 | 83,373,016 |
| 254 | பதிவாளர் நாயகத் திணைக்களம் | 849,602 | 547,130 | 302,472 |
| 282 | நீர்பாசனத் திணைக்களம் | 430,165,505 | 386,489,880 | 43,675,625 |
| 286 | | 11,100 | 6,750 | 4,350 |
| 286 | காணி ஆணையாளர் திணைக்களம் | 765,868 | 599,722 | 4,350 |
| 307 | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் | 765,868 | 599,722 | 166,146 |
| | சுதந்திர அஞ்சல் | 1,850,000 | 1,850,000 | 0 |
| | மொத்தம் | 4,613,190,179 | 4,041,545,548 | 571,644,631 |

## (அ) வரவு செலவுத் திட்ட வேறுபாடுகள்

தலைப்பு 272 இன் கீழ் 9 செலவின விடயங்களுக்குக் கூடுதலான நிதியேற்பாடு செய்யப்பட்டமையால், ஏற்பாடு செய்த நிதியைப் பயன்படுத்தியதன் பின்னர் எஞ்சிய தொகை நிகர நிதியேற்பாட்டில் 12 க்கும் 56 க்கும் இடைப்பட்ட சதவீதத்தில் அமைந்திருந்தது.

## (ஆ) பொது வைப்புக் கணக்கு

(i) இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 32,954,768 தொகையுடைய 406 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) பிற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பல்வேறு விடயங்களுக்குமென வழங்கப்பட்ட ரூபா 6,596,167 குறித்த விடயங்களுக்குப் பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(iii) ரிதீகம பிரதேச செயலகத்தில் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கமநெகும செயற்திட்டங்களில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாமையால் 6 பிரிவுகளினது ரூபா 189,974 மற்றும் 29 செயங்திட்டங்களினது ரூபா 536,262 ஆகியன தடுத்து வைத்த பண வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தன.

## (இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் தொடர்பான கணக்கிணக்கக் கூற்று

(i) விடய இலக்கம் 27201 – அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் தொடர்பான கணக்கிணக்கக்கூற்றில் 2010 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் அறவீடு நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 2,813,000 ஆகும். அந்நிலுவை மீதிகளை அறவிடுதல் தொடர்பான தொடர் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலையில் இருந்தன.

(ii) மாவட்டச் செயலகம் கடன் வழங்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய பிரதான ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்படாது ரூபா 539,260 கடனாக வழங்கப்பட்டிருந்தது.

(iii) மாவட்டச் செயலகத்தின் தனிப்பட்ட கணக்குகள் மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளுக்கிடையே ரூபா 32,175 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 4.6 சொத்து முகாமைத்துவம்

### (அ) பயன்படுத்தப்படாதும் குறைவாகப் பயன்படுத்துவதுமான சொத்துக்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறு இருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்து வகை | கூறுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் | தொடர்புடைய பிரதேச செயலகம் |
|---|---|---|---|---|
| | | | ஆண்டுகள் | |
| (i) | கட்டிடங்கள் | 1 | 2 | மாவத்தகம |
| | | 1 | 1 | இப்பாகமுவ |
| | | 1 | 5 | அளவ்வை |
| (ii) | வாகனங்கள் | 1 | 1 | ரிதீகம |
| (iiii) | இயந்திர சாதனங்கள் | 2 | 2 | கனேவத்த |

(iv) கனேவத்த பிரதேச செயலகப் பிரிவில் அமைந்த விசாலமான 70 ஏக்கர் அரச காணி கமநலசேவைக் கம்பனி ஒன்றிற்கு நெடுங்கால அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் அக்கம்பனி அதனை ஆகக்கூடிய பயன்பெறக் கூடியவாறு பயன்படுத்தாதிருந்தது.

**(ஆ) பிற நிறுவனங்களுக்குரிய சொத்துக்களை முறையற்றவாறு பயன்படுத்துதல்**

வயம்ப மாகாண சபைக்குரிய பின்வரும் வாகனங்கள் குருநாகலை மாவட்டச் செயலகத்தால் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்டமை விபரம் கீழே காணப்படுகின்றன.

| சொத்துவகை | சொத்துக்குரிய நிறுவனம் | எண்ணிக்கை கூறு அல்லது அளவு | பெறுமதி | காலப் பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| வாகனங்கள் | வயம்ப மாகாணசபை | 6 | - | 1983 தொடக்கம் |
| தொழிற்சாலையும் அலுவலகமும் உபகரணங்கள் | ஆசிய அபிவிருத்தி வங்கிச் செயற்திட்டம் | - | 200,000 | 1983 தொடக்கம் |

**(இ) தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்**

குருநாகலை மாவட்டச் செயலகத்தின் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ள 1 ஆண்டுக்குக் குறைந்த பொறுப்புகள் ரூபா 83,708 ஆகும்.

**2.7 இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| | காணிக் கட்டளைச் சட்டத்தின் 8(1)(2)10, 17(1), 86(1) ஆம் பிரிவுகள் | 304,000 | வரி மற்றும் தவணைப் பணம் என்பவற்றைச் செலுத்தாமை குறித்துக் காணிகளை மீண்டும் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்காமை |

(ii) தாபன விதிக் கோவை

----------------------------------------

| | | |
|---|---|---|
| XII அத்தியாயத்தினது 8.2.1 ஆம் பிரிவு | - | உதவி பிரதேச செயலாளர் ஒருவர் சம்பளத்துடன் கூடிய 41 நாள் வெளிநாட்டு லீவைக் கூடுதலாகப் பெற்றமை. |

(iii) நிதிப் பிரமாணங்கள்

----------------------------------------

| | | |
|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 104 | 158,400 | மாஸ்பொத்த பிரதேச செயலாளர் அலுவலகத்தில் 52-6196 ஆம் இலக்க வாகனம் திடீர் விபத்துக்குள்ளாகியதால் ஏற்பட்ட இழப்பு தொடர்பாக நட்டங்கள் மற்றும் இழப்புகளுக்கான அறிக்கையைத் தயாரிக்காமை |
| (ஆ) நிதிப்பிரமாணங்கள் 137,138,139 | 1,310,125 | மீளாய்வாண்டின்போது 3 பிரதேச செயலாளர் அலுவகங்களில் வழங்கப்பட்ட 28 காசோலைகள் 2010 டிசெம்பர் 31 ஆந் திகதியன்றும் கையிலிருந்தமை. |

(iv) சுற்றறிக்கை ஏற்பாடுகள்

---------------------------------------------

பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள்

----------------------------------------------------------

| | | |
|---|---|---|
| (அ) 2007 மே 29 ஆந் திகதிய ஜாதிகசவிய – கமநெகும அறிவுறுத்துரை இலக்கம் 5 ஆம் பந்தியின் 2(iv) | 58,402,749 | ஒப்பந்தகாரர்களுக்குக் கூடுதலாகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2009 மார்ச் 24 ஆந் திகதிய 2008/13(ii) ஆம் இலக்கச் சுற்றறிக்கை | 138,253 | (i) | இரு பிரதேச செயலாளர்கள் குறித்த வரம்பிற்கும் கூடுதலாக எரிபொருளைப் பெற்றமை. |
| | | 43,793 | (ii) | பண்டுவஸ்நுவர (கிழக்கு) பிரதேச செயலாளர் 2010 ஆம் ஆண்டின் முதல் 8 மாதங்களில் மாத்திரம் குறித்த வரம்பிற்கும் கூடுதலாக 585 லீட்டர் எரிபொருளைப் பயன்படுத்தி இருந்தமை. |
| (இ) | 2010 நவெம்பர் 22 ஆந் திகதிய ஸ்வக/மு/கிபி/2010 ஆம் இலக்கச் சுற்றறிக்கை கடிதம் | 50,696 | | மஹவ பிரதேச செயலாளர் அலுவலக உத்தியோகத்தர்கள் 6 பேருக்கு விடுமுறைதினக் கொடுப்பனவைக் கூடுதலாக வழங்கியமை. |

## 4.8 செயற்திட்ட அமுலாக்கலில் நிலவிய நலிவுகள்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிட்டுவிடுதல், செயற்திட்டங்களை முடிவுசெய்யாது கைவிட்டுவிடுதல் மற்றும் செயற்திட்டங்களில் தாமதம் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது புலனாகிய சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) செயற்திட்டங்களைக் கைவிட்டுவிடுதல்

பின்வரும் செயற்திட்டங்கள் மாவட்டச் செயலகத்தால் ஆரம்பிக்கப்படவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு | ஆரம்பிக்க வேண்டிய திகதி | | ஆரம்பிக்கப்படவில்லை. ஆரம்பிக்காமைக்கான காரணம், சுருக்கமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| ஜாதிக சவிய கமநெகும ஏற்பாடுகள் மற்றும் பிற திணைக்கள நிதியேற்பாடுகளின் கீழான 282 செயற்திட்டங்கள் | 131,825,004 | 2010 மார்ச் முதல் டிசெம்பர் வரை | (i) | காலநிலை |
| | | | (ii) | காலப்பகுதியும் நிதியேற்பாடும் போதாமை |

(ஆ) செயற்திட்டங்களை முடிவுசெய்யாது கைவிட்டுவிடுதல்

மாவட்டச் செயலகங்களின் கீழுள்ள பிரதேச செயலாளர் அலுவலகங்கள் கீழே குறிப்பிட்ட செயற்திட்டங்களை ஆரம்பித்திருந்தபோதும் அச் செயற்திட்டங்களை முடிவுசெய்யாதிருந்தன.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு | ஆரம்பித்த திகதி | 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | கைவிட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| குளியாப்பிட்டிய (கிழக்கு) | மஹகம சனசமூக நிலையத்திற்கான பாதையில் கொங்ரீட் இடல் | 449,252 | 2010.11.18 | 338,260 | விலைப்பட்டியலை சமர்ப்பிப்பதில் தாமதம் |

(இ) செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்

மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள 12 பிரதேச செயலாளர் அலுவலகங்களினது கீழே குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்கள் நிறைவேறுவதில் தாதம் அவதானிக்கப்பட்டது.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு | ஆரம்பிக்க வேண்டிய திகதி | முடிவுற வேண்டிய திகதி | 2010 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| ஜாதிக சவிய கமநெகும பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத்திட்டம் மற்றும் பிற நிதியேற்பாடுகளின் கீழான 58 செயற்திட்டங்கள். | 304,957,289 | 2010 டிசெம்பர் | 2010.12.31 | 48,485,282 | செயற்திட்டம் அங்கீகிகரிக்கப்படுவதில் தாமதம், மூலப்பொருள் பற்றாக்குறை மற்றும் காலநிலை. |

**(ஈ) பணம் விடுவிக்கப்பட்ட போதும் முன்னேற்றம் இல்லாதிருந்த செயற்திட்டங்கள்**

(i) 2009 – 2010 ஜாதிக சவிய – கமநெகும அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 10 செயற்திட்டங்களுக்கு மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 5,232,790 ஆகும். இத்தொகை பிரதேச செயலாளர் அலுவலகத்தால் மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தும், 2010 டிசெம்பர் 15 அன்றும் நிர்மாண வேலை நடைபெறாதிருந்தது.

(ii) ஜாதிக சவிய – கமநெகுமவின் கீழ் பண்டுவஸ்நுவர (கிழக்கு) அறநெறியப் பாடசாலைக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2007 ஆம் ஆண்டில் ரூபா 99,999 பெறப்பட்டிருந்தபோதும், அக்கட்டிட நிர்மாணவேலை 2010 டிசெம்பர் 31 ஆந் திகதியன்றும் நடைபெறாதிருந்தது.

**(உ) காலதாமதத்தின் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

ஜாதிக சவிய – கமநெகுமவின் கீழ் கீழே காணப்படும் வேலைகளை நிறைவேற்றுவதற்குப் பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும், அவற்றின் வேலைகள் 2010 டிசெம்பர் வரை தாமதிக்கப்பட்டன.

| பிரதேச செயலாளர் அலுவலகம் | வேலை | விடுவிக்கப்பட்ட தொகை | ஆரம்பிக்க வேண்டிய திகதி | தாமதக் காலம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| கனேவத்த | 6 வீதிகளில் கொங்ரீட் இடல் 2 மதகுகளை நிர்மாணித்தல் | 5,202,026 | 2010 ஒக்டோபர் | 3 மாதங்கள் |
| ரிதீகம | 2 வீதிகளில் கொங்கிரீட் இடல் | 300,000 | | |

**(ஊ) பண்டங்கள் மற்றும் சேவைகள் எதுவுமின்றி பணம் விடுவிக்கப்படுதல்**

மஹவ பிரதேச செயலாளர் அலுவலகம் 2010 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா 485, 500 செலவழித்து 9 கணனிகளைக் கொள்வனவு செய்து மஹவ கலாசார நிலையப் பொறுப்பு உத்தியோகத்தரிடம் 2011 ஜனவரி 12 ஆந் திகதியன்று வழங்கியிருந்த பொதும், 2011 பெப்ரவரி 03 ஆந் திகதியன்று மேற்கொண்ட களப்பரிசோதனையின்போது –கலாசார நிலையத்தில் கணனிக்கூறு ஒன்று இல்லாதிருப்பதும் அக்கணனிகள் அங்கு பெறப்படவில்லையென்பதும் புலனாகின.

### 4.9 செயற்திறன்

2010 வருடாந்த மதிப்பீடு / செயல்திட்டம் என்பவற்றிற்கமைய, மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலாளர் அலுவலகங்கள் என்பவற்றின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புரை பின்வருமாறு.

## (அ) போதியளவு நிறைவேறாத பிரதான பணிகள்

மூன்று பிரதேச செயலாளர் அலுவலகங்கள் பிரதான பணிகளை எவ்விதத்திலும் நிறைவேற்றாததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

(i) அளவ்வை பிரதேச செயலாளர் அலுவலகம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் கீழ் கெப்பிட்டிவலான மஹயாய வீதியில் கிறவல் கற்களை இடுவதற்கு ரூபா 149,816 செலவிடப்பட்டிருந்தது. 2011 பெப்ரவரி 23 அன்று மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது வீதியின் மேற்புரத்தே கற்கள் இடப்படாது மண் நிரப்பப்பட்டு அதன் மீது சிறிதளவு கற்களே இடப்பட்டிருந்தன.

(ii) ரஸ்நாயகபுர பிரதேச செயலாளர் அலுவலகத்தில் 2007 – 2010 வரை ஜாதிக சவிய – கமநெகுமவின் கீழ் நிறைவேற்றப்பட்ட வீதியில் கொங்ரீட் இடல், 6 செயற்திட்டங்களில் கற்கள் பெயர்ந்து இருந்தமை, குறித்த தூரம் வரை நிறைவேற்றப்படாமை, போதியளவு நலன்பெறுநர்கள் இன்மை, குறித்தபடி கிறவல் கற்கள் நிரப்பப்படாமை என்பன காணப்பட்டன.

(iii) பண்டுவஸ்நுவர (கிழக்கு) பிரதேச செயலாளர் பிரிவில் ஜாதிக சவிய – கமநெகுமவின் கீழ் கொங்கிரீட் இடப்பட்ட 4 வீதிகளில் குறித்த தடிப்புடனான கொங்கிரீட் இடப்படாமை, கொங்கிரீட் பெயர்ந்து போயிருந்தமை, வீதியின் மேற்புரத்தில் கற்கள் வெளிப்பட்டிருந்தமை போன்றன நேரடிப் பரிசோதனையில் புலனாகின.

(iv) ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 1993 ஆம் ஆண்டில் நிக்கவரட்டிய பிரதேச செயலாளர் பெற்றிருந்த ரூபா 200,000 க்கான தொழிற்சாலை மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன 2010 டிசெம்பர் 31 வரையிலேனும் பயன்படுத்தப்படாதிருந்தன.

## 4.10 வங்கிக் கணக்கைப் பேணுவதில் நிலவிய குறைபாடுகள்

### (அ) செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள்

இப்பாகமுவ பிரதேச செயலாளர் அலுவலகம் பேணிவரும் வங்கிக் கணக்கு ஒன்று 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 ஆண்டுகள் 3 மாதங்களாகச் செயற்பாடற்றிருந்தது. செயற்பாடற்றிருந்த தொகை ரூபா 20,322 ஆகும்.

### (ஆ) சீராக்கல் செய்யப்பட வேண்டிய மீதிகள்

2010 டிசெம்பர் மாதத்திற்கென 2 பிரதேச செயலாளர் அலுவலகங்கள் தயாரித்திருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்பட்ட சீராக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் 6 மாதங்கள் தொடக்கம் 1 ஆண்டு வரையான காலப்பகுதியின்போது வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் காசோலைகளினது பெறுமதி ரூபா 13,208 ஆகும்.

## 4.11 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

மல்லவப்பிட்டிய பிரதேச செயலாளர் அலுவலகம் ஒப்பந்தத்தில் உள்ள 12 வேலை விடயங்களும் நிறைவேறாதிருக்க சகல வேலை விடயங்களும் முடிவுற்றதாகத் தெரிவித்து ஒப்பந்தகாரருக்கு ரூபா 192,300 கொடுப்பனவு செய்திருந்தது.

## 4.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பதின்மூன்று பிரதேச செயலாளர் அலுவலகங்கள் மேற்கொண்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவாறிருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

### கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளுக்கு விலக்காகச் செயற்படுதல்

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பண்டுவஸ்நுவர (கிழக்கு) இப்பாகமுவ, அளவ்வை, நிக்கவரட்டிய, ரிதீகம, குருநாகலை, மாஸ்பொத்த, மல்லவப்பிட்டிய, நாரம்மல, உடுபத்தாவ, பொல்கஹவல, கொட்டவெஹெர மற்றும் பண்டுவஸ்நுவர (மேற்கு) பிரதேச

செயலாளர் அலுவலகங்கள் நடைமுறைப்படுத்திய ஜாதிக சவிய – கமநெகும செயற்திட்டங்களில் கொள்வனவு வழிகாட்டிக் கோவை 2006 இல் உள்ள 3.9.1 மற்றும் 3.9.2 பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஏற்பாடுகளுக்கு விலக்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) முறையான வரி உடன்படிக்கைகளின்றி ரிதீகம பிரதேச செயலாளர் அலுவலகம் 2008 டிசெம்பர் 18 முதல் ஓராண்டிற்கு ரூபா 240,000 வீதப்படியான காணி வாடகையின் அடிப்படையில் அரசிற்குச் சொந்தமான காணியினது பிரிவு ஒன்றில் ஊடகத் தூண் ஒன்றை நிர்மாணிப்பதற்கும் அதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்குமென பயன்படுத்துவதற்காக வர்த்தகத் கம்பனி ஒன்றிற்கு அது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

## 4.13 நட்டங்களும் இழப்புகளும்

குளியாப்பிட்டிய (கிழக்கு) பிரதேச செயலாளர் அலவலகத்தின் வாகனக் குழாமிலுள்ள வாகனம் ஒன்று 2002 மார்ச் 29 ஆந் திகதி விபத்திற்குள்ளானதால் ஏற்பட்ட ரூபா 119,641 இழப்பு மற்றும் குருநானலை மாவட்டச் செயலகத்தின் 54 – 7730 இலக்க வாகனத்திற்கு ஏற்பட்ட ரூபா 39,100 இழப்பு என்பவற்றை அறவிட முடியாதிருந்தது.

## 4.14 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பண்டுவஸ்நுவர (மேற்கு) பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அம்பகஹவெல செயற்திட்டத்தில் நீர் வடிவமைப்பு ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 197,000 முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2010 ஜுன் மாத முடிவில் அது முடிவுற்றிருந்த போதும் அக்காணியில் நிலவிய சுமுகமற்ற நிலைமை கரணமாக அதனைப் பயன்படுத்த முடியாதிருந்தது. அவ்வாறே 2007 ஆம் ஆண்டில் ரூபா 650,000 செலவிட்டு ஸ்தாபித்த மண் அரைக்கும் இயந்திரமும் செயற்பாடற்று உள்ளமை 2010 ஒக்டோபர் மாத நேரடிப் பரிசோதனையில் புலனாகியது.

## 4.15 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட செயற்பாட்டு வினைத்திறமையின்மை சம்பந்தமான பொழிப்பு கீழே காணப்படுகின்றது.

(அ) அளவ்வை மற்றும் பொல்கஹவெல பிரதேச செயலாளர் அலுவலகங்களில் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருட் கணிப்பு அறிக்கையில் சேர்த்துக்

கொள்ளப்படாத கழிவுப் பொருட்களும் கைதவிர்ப்புக்குச் சிபார்சு செய்யப்பட்டிருந்த பொருட்களும் பெருமளவில் அப்பிரதேச செயலாளர்களது உத்தியோகபூர்வ மனைகளில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) இப்பாகமுவ பிரதேச செயலாளர் தொகுதியில் வெல்கால கிராம உத்தியோகத்தர் பிரிவில் 2008 ஆம் ஆண்டில் மாதிரிக் கிராமங்களாக அபிவிருத்தி செய்வதற்கென 9 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தபோதும், 5 செயற்திட்டங்கள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தன.

(ஆ) வெல்கால நெசனல மற்றும் கிாமச் செயலாளர் அலுவலகம் என்பவற்றை நிர்மாணிப்பதற்கு 2008 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 2,845,586 செலவழித்து I ஆம் II ஆம் கட்ட வேலைகள் மாத்திரமே முடிவடைந்திருந்தன. ரூபா 1,705,835 செலவில் நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டு மைதானமும் பாவனையற்றிருந்தது. ரூபா 1,693,843 செலவில் யுனிட் 03 சனசமூக நிலையத்தினது அடித்தளம் அமைக்கப்பட்டபோதும் அந்நிர்மாணவேலை முடிவுறாதிருந்தது.

(இ) பண்டுவஸ்நுவர (கிழக்கு) பிரதேச செயலாளர் அலுவலகம், ஜாதிக சவிய – கமநெகுமவின் கீழ் 2007 ஆம் ஆண்டில் குளம் ஒன்றைப் புனரமைக்கையில் ஏற்பட்ட மோசடி தொடர்பாக விசாரித்து துரித அறிக்கை ஒன்றை வழங்குமாறு ஆலோசனை வழங்கி மாவட்டச் செயலாளரால் 2010 ஒக்டோபர் 14 ஆந் திகதியன்று மூவர் அடங்கிய விசாரணைக் குழு நியமிக்கப்பட்ட போதும், 2011 மார்ச் 15 ஆந் திகதியளவிலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டதற்கான சான்றிருக்கவில்லை.

(ஈ) மல்லவப்பிட்டிய பிரதேச செயலாளர் அலுவலகத்தில் 2007 முதல் 2010 வரை 12 ஜாதிகசவிய – கமநெகும அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான 12 கொஙகிரீட் செயற்திட்டங்கள் நேரடிப் பரிசோதனைக்குள்ளாகிய போது 6 செயற்திட்டங்களினது வீதித் தளத்தில் கற்கள் பெயர்ந்திருந்தமை, வெடிப்புகள் ஏற்பட்டு அதன் காரணமாக வீதி கீழிநல்கியமை, பக்கச்சுவர் அரண்கள் விலகியிருந்தமை, பொருத்துகள் முறைப்படி அமையாமை, இருபக்கங்களிலும் மண் நிரப்பட்டாதிருந்தமை போன்றன ஏற்பட்டிருந்தன.

(உ) ரிதீகம பிரதேச செயலாளர் அலுவலகத்தில் உள்ள கிராம உத்தியோகத்தர் ஒரவரது கல்வித் தகைமைகள் அவரது தகுதிகாண் காலப்பகுதியின்போது உறுதிசெய்யப்படாமையால், நியமனத் திகதியிலிருந்து 10 ஆண்டுகளாக அவர் சேவையில் அமர்த்தப்பட்டு சம்பளமும் வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்ட காணி ஒன்றினைக் குத்தகைக்குப் பெற்ற கம்பனி ஒன்று அங்குள்ள 65 தென்னை மரங்களை வெட்டி அவற்றை விற்பனை செய்திருந்தது. அதனைக் குத்தகைக்குப் பெற்றவர் பாரதூரமான தவறிழைத்தமை தொடர்பாக கனேவத்த பிரதேச செயலாளர் குத்தகை உடன்படிக்கைப் பிரகாரம் முறையான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை.

(எ) கருங்கல் உடைப்பதற்கான அனுமதிப்பத்திரங்களை உடைய 5 பேரிடமிருந்து அறவிடப்படவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவையாகிய ரூபா 36,500 அறவிடப்படுவதற்கு குளியாப்பிட்டிய(கிழக்கு) பிரதேச செயலாளர் அலுவலகம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

(ஏ) கனேவத்த பிரதேச செயலாளர் தொகுதியில் உள்ள அரச காணி ஒன்று நெடுங்காலக் குத்தகைக்கு வழங்கப்பட்டதால் 1999 முதல் 2007 வரை உடன்படிக்கைப் பிரகாரம் அறவிடப்படவேண்டிய தண்டப்பணமாகிய ரூபா 547,000 மற்றும் 2010 வரையான ரூபா 695,312 குத்தகை என மொத்தமாக ரூபா 1,242,312 அறவிடப்படாதிருந்தது.

## 4.16 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையும் வெற்றிடங்களும்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 160 | 138 | 22 |
| (ii) | இரண்டாம் மட்டம் | 2621 | 2506 | 115 |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | பிரதேச மட்டம் | 297 | 257 | 40 |
| | | 3078 | 2901 | 177 |

## 4.17 உள்ளகக் கட்டுப்பாடு

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர் அலுவலகக் கொடுப்பனவு உறுதிச்சான்றுகள் பரிசீலிக்கப்பட்டு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டபோதும், உள்ளகக் கணக்காய்வுத் திட்டமின்றிச் செயற்பட்டமையால், நிதிப்பிரமாணம் 113 குறிப்பிடும் ஆரம்ப நோக்கு இடம்பெறவில்லை.

### (ஆ) முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக்குழு செயற்படுதல்

2000 மார்ச் 15 ஆந் திகதிய பீஎப்/பீஈ/07 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2006 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய பீஎப்/எப்எஸ்/04(xiii) இலக்கச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் அறிவுறுத்துரைகளுக்கு அமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் 2010 டிசெம்பர் இறுதிவரை நடவடிக்கை எடுக்கவில்லை.